[19.]

எனது தொண்டு

பெரியார் ஈ. வெ. ரா.

"விடுதலை" வெளியீடு.
சென்னை—2.

முதற் பதிப்பு 1962.

வேலூர், (வ. ஆ.) அக். 4—

வேலூர் கோட்டைமைதானத்தில் நகர தி. க. சார்பாக தந்தை பெரியார் அவர்களின் 84-ம்பிறந்த நாள் விழாவானது29—9—62 அன்றுமாலை 6-30 மணி அளவில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கூட்டத்திற்கு வேலூர் வழக்கறிஞர் திரு. செந்தாமரை பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமை வகித்து தந்தை பெரியார் அவர்களின் பொதுத் தொண்டினைப் பாராட்டிப் பேசினார்.

அடுத்து திரு. ந. கிருஷ்ணன் அவர்கள் சிறிது நேரம் பேசினார்.

அன்பளிப்பு

திரு. ஈ. திருநாவுக்கரசு அவர்கள் நகர திராவிடர்கழகத்தின் சார்பாக 84 ரூபாய் பிறந்ததின அன்பளிப்பாக டிராஃப்ட் அளித்தார்.

தந்தை பெரியார் அறிவுரை

இறுதியாக தந்தை பெரியார் அவர்கள் அறிவுரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது;-

பேரன்புமிக்க தலைவர் அவர்களே! தாய்மார்களே! தோழர்களே!

இன்றையதினம் தேர்தலுக்குப் பிறகு இன்றுதான் வந்துள்ளேன். நண்பர் மோகன்ராஜ் இறந்த சேதி கேட்டு உடனே கிளம்பி வந்து கொண்டு இருந்தேன். இடையில் கார் ஸ்பிரிங் உடைந்துவிட்ட

த்தால் உரிய காலத்தில் வர இயலாது என்பதைக் கண்டு வருந்தி தந்திகொடுத்தேன். மோகன்ராஜ் அவர்கள் உண்மையாகப் பாடுபட்ட கழகத் தொண் டர். முக்கிய பொறுப்பை ஏற்று நடத்தி வந்தவர். அவர் பிரிவு பெரிய இழப்பாகும், நமது கழகத்துக்கு. அன்னாரின் குடும்பத்துக்கு முதலாவதாக எனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

தோழர்களே ! இது பிறந்ததின விழா என்ற பேரில் கூட்டம் கூட்டி இருக்கின்றார்கள்.

கழக புத்தகங்கள்எனது பிறந்ததினமலர்போன்ற வைகள்ஏராளமாகக்கொண்டுவந்துஇருக்கின்றோம். கழகப் பிரசாரத்திற்காக கழகக் கொள்கைகள் அடங்கிய சங்கதிகளைக் கொண்டவைகள் ஆகும்.

கழகப்பிரசாரத்துக்கான ஏராளமான நூல்கள் உள்ளன.

சிலர் கேட்கலாம், "உனக்குப்பின் யார் உனது கட்சியை நடத்த" என்று. அவர்களுக்கு நான் கூறுகின்றேன். நமது, எனதுகொள்கைகள் அடங்கிய ஏராளமான நூல்கள் இருக்கின்றனவே அதுவே போதும் என்றுதான் கூறுவேன்.

எங்களைவிட அதிகம் படித்தவர்கள், அறிவாளி கள் என்பவர்கள் இருப்பார்கள். அவர்கள் எல்லாம் இதுபோன்ற கருத்துக்கள் சொல்ல முடியாது. சொன்னால் வாழ முடியாது.

வாரிசு ஏன் ?

தோழர்களே ! இன்று நேருவுக்குப்பிறகு யார்? என்றுபலர் கேட்கின்றார்கள். ஒரு ஆளைக் குறிப் பிட்டு இன்னார் என்று கூற முடியவில்லையே. நேருவே கூறுகின்றார். வாரிசு என்பது பரம்பரைச்

சொத்தா? எவனாவது வந்து போகின்றான்! அதற்கு இப்போது என்ன? என்கின்றார்.

அதுபோல ஜின்னாவுக்குப் பிறகு அவரின் இடத்தைப் பூர்த்திபண்ணும்படியாக யாரும் தோன்றவில்லை. ஆனால் பெயரளவில் இருப்பார்கள். அவர் பெயரைப் பயன்படுத்திப் பலன் அடைபவர்களாகத்தான் இருப்பார்கள்.

காலம் சென்ற டாக்டர் அம்பேத்காருக்குப் பிறகு அவரது ஸ்தாபனத்துக்கும் சரி, தாழ்த்தப் பட்ட மக்கள் சமுதாயத்துக்கும் சரி ஒரு நல்ல தலைவர் தோன்றவே முடியவில்லையே!

பார்ப்பானால் சுடப்பட்டுச் செத்தாரே அந்த காந்தியாருக்குப் பிறகு அந்த இடத்தைப் பூர்த்தி செய்ய ஆள் யாரும் தோன்றவே இல்லையே! இப்படியேஅவருக்குப்பின் யார்,அவருக்குப்பின்யார்? என்று கூறிக்கொண்டே போகலாம்.

எனது நண்பர் ராஜகோபாலாச்சாரியாருக்குப் பிறகுபார்ப்பனர்களுக்கு யார் தலைவர்? கூறவே முடிய வில்லையே.

இப்படித்தான் இன்னாருக்குப்பின் இன்னார் என்று கூறவே முடியாது. இந்த சர்ச்சையில் இறங்குவது பைத்தியக்காரத்தனம்.

உண்மைத் தொண்டுக்கு வேறு கட்சி ஏது?

இந்த நாட்டில் சமுதாயத்துறையில் உண்மைத் தொண்டுசெய்ய நம்மக்களுக்கு நம் கட்சியைத்தவிர வேறு கட்சியே இல்லை. நாம் இன்று இந்நாட்டில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள்.

உதாரணம் வேண்டுமானால் இன்று நம்மை எதிர்க்கக்கூடிய கட்சிகள் நாட்டில் ஏது? ஒன்றும் இல்லையே! காங்கிரஸ்காரன் நமது ஆதரவை எதிர்பார்க்கிற நிலையில் இருக்கின்றோம். உண்மையான காங்கிரஸ்காரனாக இருந்தால் நம்மீது விசுவாசம் உள்ளவனாகத்தான் இருப்பான். பொறாமைக்காரன்வேண்டுமானால் தூற்றித்திரிவான்.

எந்தக்கட்சி எதிர்க்கிறது?

இந்த கண்ணீர்த்துளிதான் என்ன? நம்மிடம் என்ன வம்புக்கு வருகின்றான்? கம்யூனிஸ்டுதான் என்ன? எதில் நம்மை எதிர்க்கிறான்? வேறு எந்தக் கட்சி நம்மை எதிர்க்கிறது? எனவே நம்மை யாரும் குறைகூறுவது இல்லை. நாம்தான் அவர்களை எல்லாம் வெளுத்து வாங்கிக்கொண்டுவருகின்றோம்.

எனவே நம்மை மற்றவன் குறைகூறத்துணிவது இல்லை. ஆனால் நம்மிடையே சிலர் தோன்றி குறைகூற முனைகின்றனர். இது எனது வாழ்வில் புதிதல்ல. சகஜம்தான்.

நம் கழகத்தைப்போல தலைவருக்கு அடங்கி நடக்கக்கூடிய கட்டுப்பாடான இயக்கம் வேறு ஒன்றைக்காட்டமுடியாது. எனவே நமது கொள்கைகள் அடங்கிய புத்தகங்களை ஒவ்வொரு தோழர்களும் உருப்போடுங்கள். அதுமக்கள் மத்தியில், அதாவது மக்கள் மனதில் தங்கினால் அதுவே போதுமானது.

மக்கள் ஒழுக்கம் உயர வழிகள்

நான் விடுதலை சார்பாக வெளியிடப்பட்டுள்ள எனது பிறந்ததினமலரில் நாட்டில் ஒழிக்கப்படவேண்டியவைகள் என்ன என்ன என்று குறிப்பிட்டுள்ளேன், இதுகளை எல்லாம் கூற என்னால்தான்,

எங்கள் இயக்கத்தால்தான், முடியும். மற்றபடி அரசியல்காரர்களால் முடியாது.

''மக்களிடம் உணர்ச்சி ஒழுக்கம் ஏற்பட வேண்டுமானால் சினிமா ஒழிக்கப்படவேண்டும்''

''நீதி, நேர்மை ஏற்படவேண்டுமானால் வக்கீல் முறை ஒழிக்கப்படவேண்டும்.''

''நாட்டில் காலிகள் அயோக்கியர்கள் ஒழிக்கப்படவேண்டுமானால் தேர்தல் முறை ஒழிக்கப்படவேண்டும்''

''வியாபாரத்தில் நாணயக்குறைவும், கள்ளவியாபாரமும் ஒழிக்கப்படவேண்டுமானால், லைசென்ஸ், பர்மிட், கட்டுப்பாடுமுறை ஒழிக்கப்படவேண்டும்.''

''தொழில்துறையில் தொழிலாளரிடையே சுமுகமும், நாணயமும், பொறுப்பும் ஏற்பட வேண்டுமானால், லாபத்தில் பங்குகொடுத்து, தொழிலாளர் சட்டம் ஒழிக்கப்படவேண்டும்''.

''அய்க்கோர்ட்டில் சமூகநீதி வேண்டுமானால் பார்ப்பனரை ஜட்ஜாக நியமிப்பது ஒழிக்கப்படவேண்டும்'' என்றும் மற்றும் பலகுறிப்பிட்டுஇருக்கின்றேன். இதுகள்எல்லாம்இன்றுநமது சமுதாய வளர்ச்சிக்கும், நாட்டு முன்னேற்றத்துக்கும் கேடாக இருக்கின்றன. இதுகள் எல்லாம் ஒழிக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளேன். மீண்டும் கூறுகின்றேன், இதுகள் எல்லாம் நம்மால், நம்மைப்போன்றவர்களால்தான் கூற முடியுமே ஒழிய அரசியல்காரரால் ஒருபோதும் முடியாது.

தோழர்களே! எனக்குமுன் பேசிய தோழர்கள் எல்லாம் நான் எனது பிறந்ததின அறிக்கையாக

"பொதுத்தொண்டு" என்ற பெயரில் எழுதியுள்ள கட்டுரையில் "இந்த வடஆர்க்காடு ஜில்லாவும் தஞ்சை, திருச்சி, சென்னை போன்ற மாவட்டங்கள், நமது கழகத்தில் இருந்தே, நமக்கு எதிரிகளாகக் கிளம்பி இருக்கும் கோஷ்டியினருக்கு தளமாக இருக்கின்றன" என்று குறிப்பிட்டு உள்ளதைச் சுட்டிக் காட்டி என்னை குத்திக்காண்பித்தார்கள். நான் இன்று இதுகளை எல்லாம் பற்றி பேசுவதற்காக வரவில்லையானாலும் தோழர்கள் தாங்களாகவே ஆரம்பித்து விட்டபடியால் அதுபற்றிச் சிறிது விளக்க வேண்டியவனாக உள்ளேன்.

கழகத்துக்கு உள்ளிருந்தே துரோகம்

தோழர்களே! நான் எனது பொதுவாழ்வில் எவ்வளவு தூரம் மனப்பூர்வமாக சுயநலம் இல்லாமல் பாடுபட்டு இருந்தாலும்கூட, கழகமும் ஒரு பக்கம் செல்வாக்காக வளர்ந்து வந்தாலும், ஒரு பக்கம் கழகத்திலிருந்து எதிரிகளும் வளர்ந்துகொண்டே வந்து இருக்கின்றனர்.

நான் அந்த கட்டுரையிலேயே தெளிவாகக்குறிப்பிட்டு உள்ளேன்,

ராஜாஜியும் நானும்

முதலாவது ராஜாஜி. நாங்கள் இருவரும்நெருங்கிய நண்பர்கள். அவராலேயே நான் காங்கிரசுக்குப் போனவன். என்னைநமது தலைவர் நாயக்கர் என்று தூக்கி வைத்துக்கொண்டாடியவர். நான் காங்கிரசிலிருந்து வெளியேறி என் மக்களுக்கு ஆக எடுத்துக் கொண்ட லட்சியம் காரணமாகவே ஒருவருக்கு ஒருவர் எதிரிகளாகி விட்டோம். அவர் என்னை காங்கிரசில் சேர்த்ததே ஜஸ்டிஸ் கட்சிக்கு எதிர்ப்பாகத் தான். பார்ப்பனர்கள் தங்களுக்கு ஜஸ்டிஸ் கட்சி

காரணமாக நாட்டில் இருந்த எதிர்ப்பைச்சமாளிக்க காங்கிரசில் பார்ப்பனர் அல்லாதார்களைத் தலைவராக்க வேண்டிய அவசியம் வந்தது.

தமிழ்நாட்டைப்பொறுத்தவரை என்னையும், அகில இந்தியாவிற்குமாக காந்தியாரையும் தேடிப் பிடித்துப்போட்டார்கள்.

நாங்கள் அவர்களுக்கு அடிமையாக ஆனோம். நான் நடந்து கொண்ட மாதிரியைப்பார்த்து என்னையே தலைவராக்கியதோடு அல்லாமல் எமது தலைவர் நாயக்கர், நமது தலைவர் நாயக்கர் என்று உண்மையாகவே அழைத்து வந்தார்கள், ராஜாஜியும் மற்ற பார்ப்பனத் தலைவர்களும்! நான் அவ்வளவு தூரத்துக்கு முட்டாள்தனமாக அவர்கள் நலனுக்காக ஜஸ்டிஸ் கட்சி எதிரியாக இருந்தேன்.

அன்புக்கு ஓர் எடுத்துக்காட்டு

ராஜாஜி என் மீது கொண்டு இருந்த உண்மையான அன்புக்கு ஒரு எடுத்துக்காட்டு கூறுகின்றேன்.

ஒருசமயம்நான் ஈரோட்டில்காயலாவாகபடுத்து இருந்தேன். ராஜாஜி வந்து என்னைப்பார்த்துவிட்டு திருச்சி டாக்டர் ராஜனுக்கு தந்தி கொடுத்து வரவழைத்து இரவுபூராவும் இருவரும் கண் விழித்துக் கொண்டு இருந்து எனக்கு மருந்து கொடுப்பது முதலிய காரியங்களை நர்சுகள்போல் கவனித்துக் கொண்டு பார்த்தார்கள்.

மறுநாள் காலையில் ராஜாஜி ஒரு முக்கிய அலுவலாக வெளியில் போக வேண்டி இருந்தது. அருகில் இருந்த திரு. கே. சந்தானத்தைக்கூப்பிட்டு " சந்தானம்! நாயக்கர் உயிர் சாதாரணமானதல்ல

முக்கியமானது. ஜாக்கிரதையாக கவனித்து வேண்டியதைச்செய்'' என்று கூறிவிட்டு என்னிடமும் பிரியமுடியாமல் விடைபெற்றுச் சென்றார்.

இப்படிப்பட்டவர்களுக்கு எல்லாம் எனது லட்சியத்தின் காரணமாக விரோதமானேன். காங்கிரசில் அவர்கள் லட்சியம் நமது லட்சியத்திற்குக் கேடானது என்ற ரகசியம் தெரிந்து வெளிப்படையாகவே எதிரியானேன்.

இலட்சியம் பிரித்தது

நான் காங்கிரசை விட்டு வெளியே வந்த பிறகு முத்துரெங்கமுதலியாரை தலைவராகப் போட்டார்கள். பார்ப்பனர்கள் என்மீது பழிசுமத்த நான் அந்தக் கணக்கு காட்டவில்லை இந்தக்கணக்குக்குப் பதில் கூறவில்லை என்று விஷமப்பிரசாரம் செய்யத் தொடங்கினார்கள். ராஜாஜி அப்படி ஒன்றும் சந்தேகப்படத்தக்க வகையில் இருக்காது என்று அவர்களுக்கு புத்தி கூறினார். என் மீது எப்படியும் தப்புக் கண்டுபிடிக்க முயன்றார்கள். ஒரு 1000 ரூபாய்க்கு(நான் பெற்றுக் கொண்ட வகைக்கு) கணக்குக் காட்ட வில்லை என்றும் அதற்குச் சமாதானம் என்ன என்றும் புதியதாக காங்கிரஸ் தலைவராக வந்த முத்துரெங்க முதலியாரை விட்டு எழுதச் சொன்னார்கள். இந்த 1000 ரூபாய் வைக்கம் சத்தியாக்கிரக காலத்தில் நான் எழுதித் தருவித்த தொகையாகும். இதில் 750 ரூபாய் சத்தியாக்கிரக கமிட்டித் தலைவர் திரு. கோவிந்தன்சாணார் அவர்களிடம் செலவுக்காகக் கொடுத்து இருந்தேன். அவர் பெற்றுக்கொண்டு எனக்குக் கொடுத்த ரசீதும்

என்னிடம் இருந்தது. பாக்கி ரூ.250 கதருக்காக திரு. கே.வி.கிருஷ்ணசாமிஅய்யர் என்பவருக்குக்கொடுத்து இருந்தேன். அந்தக் குறிப்பும் இருந்தது.

இப்படி சத்தியாகிரகக் கமிட்டித் தலைவருக்கும் கதருக்காக இராட்டினம் பஞ்சு நூல் வகைக்கும் கிருஷ்ணசாமி அய்யருக்கும் கொடுத்துள்ள விபரத்தை முத்துரெங்க முதலியாருக்குஎழுதினேன்,

இப்படி இருந்தும்கூட இந்த பார்ப்பனர்கள் வைக்கத்துக்கும், திரு. கிருஷ்ணசாமி அய்யர் இடத்துக்கும் சென்று, வாங்கியது உண்மைதானா என்று விசாரித்துவந்துள்ளார்கள்அவர்களும்உண்மைஎன்று அவர்களிடம் சொல்லியதோடுஅல்லாமல் எனக்கும் இப்படி வந்து கேட்டார்கள் என்று கடிதம் எழுதி விட்டார்கள்.

இப்படி மூக்கறுபட்ட பின்னும்கூட அவர்கள் சும்மா அத்தோடு நிற்கவில்லை. மீண்டும் முத்து ரெங்க முதலியாரைவிட்டுகடிதம்எழுதச்சொன்னார்கள். ''தாங்கள் இந்த 1000 ரூபாய்க்கு தக்க காரணம் இன்னும் சொல்லவில்லை. ஆகவே நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டிவரும் என்று எழுதினார். அவர் பார்ப்பான் சொன்னபடி எல்லாம் ஆடும் ஆள். நான் மிகக்கோபமாக உங்கள் சாதிப்புத்தியை காட்டி விட்டீர்கள். 1000 ரூபாய்க்கு நான் விபரமும் எழுதி இருக்கின்றேன். அதற்கான ரசீதுகளும் என்னிடம் உள்ளது. இதுவும் நம்பாமல் வைக்கத்துக்கும், திருப்பூருக்கும் போய் உண்மைதானா என்று விசாரித்து வந்திருக்கின்றீர்கள்! மீண்டும் இப்படி விஷமத்தனமாய் எழுதச்செய்து இருக்கின்றீர்கள் என்று பத்திரிகையில் எழுதினேன்.

தோழர்களே! இந்த சங்கதி இப்படி கடிதப் போக்கு வரத்து நடந்து வருவதுடன் வெளியிலும்

விஷமப் பிரசாரம் காரணமாக கூட்டத்தில் பொறுப்பில்லாமல் சிலர் "நீங்கள் காங்கிரசில் பணம் அடித்துக்கொண்டு வந்துவிட்டீர்களாமே நிஜமா?" என்று கேட்பார்கள்.

இப்படி பொறுப்பில்லாமல் கேட்பவரைப் பார்த்து நான் கூறுவேன், நீ கூட உனது அப்பனுக்குப் பிறக்கவில்லையாம். உங்கள் வீட்டில்வேலை செய்துகொண்டு இருந்த ஆளுக்குத்தான் பிறந்தாய் என்கின்றார்களே உண்மையா, என்று சொல்லத் தொடங்கினேன்.

மற்றும் சொல்லவேண்டுமானால் சொல்லுகின்றேன். "நான்தான்பணம் காங்கிரசில் இருந்து அடித்துக்கொண்டு வந்தேன் என்றால், உங்கள் காங்கிரஸ் அவ்வளவு முட்டாளாகத்தானே இருந்தது? என்னை ஏன் அப்போதே பிடித்து இருக்கக்கூடாது? அல்லது என்மீது நடவடிக்கை எடுத்து இருக்கலாமே?" என்று பதில் சொல்ல ஆரம்பித்தேன். அவர்கள் விஷமப் பிரசாரம் எடுபடவில்லை. இதனால் நான் வளர்ந்து விட்டேனே தவிர குறைந்துபோகவில்லை.

ஜஸ்டிஸ் கட்சியிலும் நட்பினர் எதிரியாயினர்

அடுத்து ஜஸ்டிஸ் கட்சிக்கு வந்தேன். திரு. ஜே. எஸ். கண்ணப்பர் என்னுடன் நெருக்கமாக இருந்தார், அன்று நமக்கு அரசாங்கத்தில் செல்வாக்கு இருந்தது. முக்கியமான காரியங்களுக்கு மந்திரியிடம் இவரைத்தான் நான் அனுப்புவேன். அதன் காரணமாகவே செல்வாக்குப் பெற்று நமக்கு கடைசியில் எதிரியானார். வேறுபத்திரிகை ஆரம்பித்து நம்மையே அதில் குறைகூறினார், திட்டினார்.

அடுத்து திரு. எஸ். ராமநாதன். அவரும் எனது

நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். இருவர் கருத்தும் ஒரே மாதிரியாகவே இருக்கும், அவர் வெகுநாள் எங்கள் வீட்டிலேயே இருந்து இயக்க காரியங்களைக் கவனித்தார். கடைசியில் அவரும் எதிரியானார் குறை கூறினார்,

அடுத்து திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் நம் முடன் மிக்க அன்பு பூண்டவராகத்தான் இருந்தார். அவரும் எதிராக கருத்துவேற்றுமைகொண்டு நண்பர் சவுந்தரபாண்டியன் போன்றாருடன் சேர்ந்து எதிர்த்தார்,

திரு. சவுந்தரபாண்டியன் முதலானவர்கள் சுய மரியாதை சங்கம் தங்களுக்குத்தான் உரியது என்று எனக்குத்தெரியாமலேவேலைசெய்து சிலஆட்களைச் சேர்த்துக் கொண்டு சங்கத்தை ரிஜிஸ்டரே செய்து கொண்டு விட்டார். இதற்கு சவுந்தரபாண்டியன் தலைவர்; பொன்னம்பலனார் செகரட்ரி.

அடுத்து பொன்னம்பலனார் 10 வருஷத்துக்கு மேலாகவே நமது வீட்டிலேயே இருந்தார். பணம் காசு புழங்கும் அளவுக்கு பவர்பட்டம் கொடுக்கும் அளவுக்கு நம்பி இருந்தேன். பிறகு அச்சாஃபீசே தன் னுடையதென்று பூட்ட அல்லவோ ஆரம்பித்தார்! அவரும் எதிரியானார்.

அடுத்து பி.பாலசுப்பிரமண்யம். இவர், நான்தான் பெரியார் அவர்களின் தத்துப்பிள்ளை என்றுமேடை யிலேயே கூறிக்கொள்ளுவார். அவரையும் ரொம்ப நம்பினேன். அந்தக் காலம் அட்வைசர் ஆட்சி நடை பெற்றகாலம். இரயில்வே உணவு விடுதிகளில் பிரா மணாள் சாப்பிடும் இடம், சூத்திரர் சாப்பிடும் இடம், என்று போடப்பட்டு இருந்ததை நீக்கும்படி அரசாங்கத்துக்கு விண்ணப்பம்செய்து, அப்படி நீக்க

வில்லையானால் முக்கியமானவர்களே முன்னின்று நார்கொண்டு அழிக்க நேரிடும் என்று அரசாங்கத் திற்கு தெரிவித்து இருந்தோம்.

உடனே கவர்னர் திரு. ஹோப், சர். ஆர். கே. சண்முகம்செட்டியார், ராஜா சர். முத்தையாசெட் டியார் ஆகியவர்களைவிட்டு பத்துநாள் பொறுத்து இருக்கச் சொல்லுங்கள். நான் மேலே எழுதி இருக் கின்றேன் என்று சொல்லி அனுப்பியதோடு கடைசி யாக பி, பாலசுப்பிரமண்யம் அவர்களிடம் சொல்லி அனுப்பினார். மற்றஇருவர் சொன்னதற்காக நான் பிராமணாள் அழிப்பை நிறுத்திக் கொள்ளவில்லை. பாலசுப்பிரமண்யம் சொல்லுகின்றாரே என்பதற் காக நிறுத்திக்கொண்டேன் என்றால் அவர் எவ்வ ளவு நெருக்கமாக இருந்து இருப்பார் என்பதை யோசித்துப் பாருங்கள்.

பிறகு கொஞ்ச நாளில் ஒருமணி நேரத்தில் தந்திமூலம் எல்லா ரயில்வே உணவு விடுதியிலும், பிராமணாள், சூத்திரர் பெயர்ப்பலகைகள் எடுத்து விடப்பட்டன.

அட்வைசர் ஆட்சியில் நமது ஆலோசனைப்படி தான் ஆளப்பட்டதாகையால் கவர்னர் எனக்கு ஒரு விஷயத்தை சொல்லவேண்டுமானாலும்பாலசுப்பிர மண்யம் மூலம்தான் சொல்லி என்னிடம் அனுப்பு வார்.நானும்பாலசுப்பிரமண்யம்மூலம்பதிலோவேறு தகவலோ கவர்னருக்கு அனுப்புவேன். அப்படி எல்லாம் இருந்தவர்தான் எனக்கு எதிரியானார். நான் ஜஸ்டிஸ் கட்சியையே கெடுத்துவிட்டேன் என்றுகூறி,தனிப்பத்திரிகை தனிக்கட்சி ஆரம்பித்து திட்டிப்பார்த்தார். அவரும் வெற்றி பெறவே இல்லை.

இப்படி நான் மேலே கூறியவர்களின் எதிர்ப்பிர

சாரத்தினால் நானோ, எனது பிரசாரமோ, எனது கழகமோ பாதிக்கப்படவே இல்லையே.

கழகத்திலிருந்தும் பிரிந்தனர்

அடுத்து அண்ணாத்துரை. அவர் சங்கதிதான் எல்லோருக்கும் தெரியுமே. அவர் வாழ்வுக்கு ஆக உத்யோகத்துக்கும் போகும் நிலையில்தான் இருந்தார். ஒரு முக்கிய நண்பருக்கு எழுதிய கடிதத்திலேயே "கழகத்தில் இருந்து விலகும்படியாகவோ, அல்லது விலக்கும்படியான நிலையோ தமக்கு ஏற்படலாம்" என்று எழுதி இருக்கின்றார். இன்னமும் கடிதம் என்னிடம் உள்ளது.

இப்படிப்பட்ட நிலையில்இருந்தவருக்கு பிரிந்து போக, சம்பத் உயிர் கொடுத்தான். திரு. எஸ். குருசாமி தைரியம்கொடுத்து உற்சாகப்படுத்தினார். பிறகு நம்மை விட்டுப் பிரிந்து போனார். போனவர் எனது கல்யாணத்தை ஏதோ சாக்குக்காட்டிப் போனார்.

இரட்டைக்குழல் துப்பாக்கியாம்!

தனிக்கட்சி அமைத்தார். தனது கட்சிக்கும் நமது கொள்கைதான். தனது கட்சியும் திராவிடர் கழகமும் இரட்டைக்குழல் துப்பாக்கி. நாங்கள் பிரிந்தாலும் கொள்கை ஒன்றுதான். என்று வியாக்கியானம் செய்தார். அவர் ஒரு கோஷ்டியைச் சேர்த்துக் கொண்டு பிரிந்ததனால் திராவிடர்கழகமோ, நானோ ஒன்றும் பாதிக்கப்படவே இல்லையே. சொல்ல வேண்டுமானால் கோளாறு இல்லாமல் வளர்ந்தே வந்துதான் இருக்கின்றோம்.

குருசாமியின் எதிர்ப்பு

தோழர்களே! இப்படி 7, 8 பேர்களுடைய எதிர்ப்புக்கு முகங் கொடுத்தமாதிரி இன்று குருசாமியின் எதிர்ப்புக்கும் முகம் கொடுக்கும் நிலையில் உள்ளேன். குருசாமியின் கையாட்களான எம். கே. டி. சுப்பிரமணியம், நாத்திகம் ராமசாமி எஸ். டி. விவேகி, லோகநாதன் போன்றவர்கள் தமிழ்நாடு பூராவும் சென்று விஷமப் பிரசாரம் செய்கின்றார்கள்.

நான் இந்த வடஆர்க்காடு ஜில்லா நமது எதிரிகளுக்கு முக்கிய தளமாக உள்ளது என்று எழுதியது பற்றி முன்பு பேசியவர்களும். மற்றவர்களும் ஆத்திரப்பட்டார்கள்.

நான்தான் கேட்கின்றேன். நமது கழகத்துக்கும், எனக்கும் எதிர்ப்பாக உள்ள குருசாமியின் கையாட்களான எம். கே. டி. சுப்பிரமண்யம், நாத்திகம் ராமசாமி முதலியவர்களை எதற்காகக் கூப்பிட்டு கூட்டம் நடத்தினீர்கள்?

இந்த நாத்திகம் ராமசாமி யார்? நம் கட்சிக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம்? அவர் ஒரு கட்சியால் வளர்ந்து அதைவிட்டு வந்து அதைக்கண்டபடி வைதுகொண்டு இருக்கிறார். நம் கட்சிக்காரர் அல்ல. நாத்திகம் பத்திரிகைக்கும், நமது இயக்கத்துக்கும் சம்பந்தமே இல்லை என்று பல மாதங்களுக்குமுன்னமேயே பத்திரிகையில் எழுதி இருக்கின்றேன். அந்தப் பத்திரிகையில் என்னையே கிண்டல் செய்கின்றார், கழகத்துக்கு எதிர்ப்பாக எழுதிக் கொண்டே என் தலைவர் பெரியார் என்கின்றார்!

இந்த ஆள் கண்ணீர்த்துளியில் இருந்து விலகி நமது இயக்கத்துக்கு ஆதரவாக எழுதத் தொடங்கிய காலம் முதலே எனக்குப் பிடிக்கவில்லை. நம்

இயக்கத்தில் சேர்ந்து கொள்ளுகின்றேன் என்று வந்து கேட்டார். நான் ஒப்பவில்லை. காரணம், இந்த ஆள் கண்ணீர்த்துளிகளிடமே ரகளை பண்ணி வந்த ஆள், நாளை நம் இயக்கத்திலும் ரகளையை உருவாக்கக் கூடும் என்றே மறுத்தேன். இந்த பத்திரிகையிலேயே திரு. குருசாமி விலகிவிட்டதாக எழுதி இருக்கிறார். கழகத்தைப்பற்றியும் நம்மைப்பற்றியும்குறைகூறிஅதாவதுகழகம்மோசமாகிப்போய்விட்டது என்று எழுதிஇருக்கின்றார்.நாளாவட்டத்தில் இன்னும் மோசமாக எழுதுவார். தனது எழுத்தை பத்திரிகையை மக்கள் படிக்கவேண்டுமென்று "என் தலைவர்" என்கிறார்.

நான் வ. ஆ. எதிரிக்கு ஒரு தளம் என்று எழுதியதற்காக இந்த ஊர்க்காரர்கள் ஏன் இப்படிப்பட்டவர்களுடன் ஆதரவாக இருந்து கழகத்துக்கு அவர்களைக் கூப்பிடவேண்டும்? இப்படி எதிரிக்கு ஆதரவாக இருப்பவர்களை நான் எதிரியாகத்தானேகருதவேண்டியுள்ளது? இவர்களைப்போல பல ஊர்களிலும் எதிரிகளுக்கு ஆதரவாளர்கள் இருக்கின்றனர். அவர்களை நடவடிக்கை எடுத்து நீக்கினால்தானே நான்,நமது கழகம் பந்தோபஸ்தாக இருக்கமுடியும்?

திரு. குருசாமி தாம் பத்திரிகையை விட்டு விலகிக்கொண்டதற்குக் காரணம் அவரே நாத்திகம் பத்திரிகையில் எழுதி இருக்கின்றார். "டி. டி. கே. தேர்தலில் சென்னையில் நிற்பதுபற்றி தாம் (அவரை ஆதரித்து) எழுதிய தலையங்கத்தை விடுதலை மானேஜர் அந்தத்தொகுதியில் நிற்கும் தமது மைத்துனர் சம்பத்து தேர்தலுக்கு பாதிக்கும் என்று போடவில்லை,ஆகவே விலகிக்கொண்டேன்" என்று.

சென்னையைப் பொறுத்தவரை தேர்தலில் நம்

தோழர்கள் எப்படி நடந்துகொள்வது என்று நான் ஒன்றும் சொல்லவில்லை. பலபாகங்களுக்கும் தேர்தல் பிரசாரத்திற்குச்சென்றுள்ளநான்சென்னைக்குப் போகவில்லை. சம்பத் நிற்கின்றபடியால் நாம் எதிர்ப்பு தெரிவிக்கவேண்டிய அவசியம் இல்லை என்று நமது தோழர்களிலே பெரும்பகுதியினர் கருதினர். ''சம்பத் சென்னையில் நின்றதுதவறு'' என்று பரிதாபப்பட்டு நானும் திரு. குருசாமியும் ஒன்றுக்கு மேற்பட்டதடவை பேசிஇருக்கிறோம். கண்ணீர்த்துளிகள் ஜெயித்து கேடுவிளைவிப்பதை விட இவர் ஜெயித்துப்போனாலாவது கேடாவது இல்லாது இருக்கும் என்று கருதினேன்.

இந்த தலையங்கத்தை எனது பார்வைக்கு மானேஜர்அனுப்பினார். நான்தான் நிறுத்திப்போட்டேன். அதற்குள்ளாக, டி. டி. கே. யும் வேறுஇடம் திருச்செந்தூர், தொகுதி பார்த்துக்கொண்டார்.

''இந்த தலையங்கம் வெளிவந்தால் சம்பத்துக்குப் பாதிக்கும் என்று கருதியே வெளிஇடவில்லை'' என்கின்றார். சம்பத்தைத்தான் பாதிக்கும் என்று தனக்கே தெரிகின்றதே, பின் ஏன் இப்படி எழுத வேண்டும்? மற்றும் தாறுமாறாக சம்பத்தைப்பற்றி கண்டபடி எழுதுகின்றார். இந்நிலையில் அக்கட்டுரை நல்ல எண்ணத்தோடுஎழுதிஇருக்கமுடியுமா? மேலும் சம்பத்தை வையவேண்டிய அவசியம் என்ன? அவன் திருடினானா? ஒழுக்கக்கேடாக நடந்தானா? நமக்கு ஏதாவது தொல்லைகொடுத்தானா? எதற்காகத் திட்டவேண்டும்? அப்படி செய்யவேண்டிய அவசியம்தான் என்ன? கண்ணீர்த்துளி பிரிய திரு. குருசாமிதான் தூண்டுகோலாக-ஆதரவாகஇருந்தார் என்பதை சம்பத் வெட்டவெளிச்சமாக்கிவிட்டான் என்பதுதானே?

நான் சதி நடக்கின்றது என்று கூறினேன் என்றால் சாதாரணமாக அல்ல. இந்த ஊர் முக்கியஸ் தர்பற்றியே எனக்குத்தகவல் கிடைத்துள்ளது. ஆதாரம் கையில் வைத்துக்கொண்டுதான் பேசுகின்றேன். சென்றவாரத்திற்குமுன் இந்தமாவட்டத்தில் கூட்டங்களுக்குவந்த விவேகி என்பவர் கழகத்தோழர்களைக் கூட்டிவைத்து விஷமத்தனமாக பிரசாரம்செய்ததாக முக்கியமான நபர்களே வந்து என்னிடம் கூறினார்கள். அவர்களிடம் எழுதியும் வாங்கிவைத்துள்ளேன்.

கழகத்தில் உள்ளவர்கள் எந்தவித சுயநலமும் கருதாமல் பாடுபடுபவர்களாக அடங்கிநடப்பவர்களாக இருக்க வேண்டும். இல்லையானால் போய்விடவேண்டும். இருந்துகொண்டே தொந்தரவு கொடுப்பது என்பது கூடாது.

3-4 ஆண்டுச் சதி

நான்தான் 3, 4 வருஷங்களாகவே கோஷ்டி உருவாகின்றது துரோக எண்ணம் வளருகிறது என்று எழுதி இருக்கிறேனே. சிலர் கேட்கலாம் ஏன் ஆரம்பத்திலேயே இதுபற்றி கேட்கக்கூடாது? என்பீர்கள். நான் குருசாமியை 1½ வருஷத்துக்கு முன்னதாகவே கேட்டேன். அதற்கு அவர் "இப்படி எல்லாம் என் மீது கூறப்படுவது பற்றி நம்புகின்றீர்களா? அது வீண் விஷமப்பிரசாரமே" என்றார். "இப்படி மட்டும் சொன்னால் போதுமா உங்களுடன் சேர்த்துக் கொண்டு இருக்கும்

ஆட்கள் எல்லாம் அப்படிப்பட்டவர்கள்தானே" என்றேன். அதற்கு அவர் "அவர்கள் நடந்தால் நான் என்ன செய்வேன்" என்றார். இன்னும் பல விஷயங்கள் இருக்கின்றன அவசியம் நேரிடும்போது சொல்லுகிறேன்.

என்ன சுயநலம் கண்டீர்கள்?

தோழர்களே! நான் என்ன தவறாக நடந்தேன்? நான் என்ன சுயநலத்துக்காக கழகத்தைப்பயன்படுத்திக்கொண்டேன்? எனக்கு ஏன் இப்படிப்பட்ட எதிர்ப்புகள் ஏற்பட வேண்டும்? இத்தனை நாள் பொதுவாழ்வில் ஈடுபட்டதற்கு இதுதானா பலன்? இதுதானா பரிசு? அதுவும் என்னிடத்தில் பிள்ளை போல் வளர்ந்தவர் கொடுக்கும் பரிசு இதுதானா?

நான் எத்தகைய எதிர்ப்புகள் வந்தாலும் சமாளிக்கத் தயாராகவே இருக்கின்றேன். எனக்கு ஒன்றும் புதியதல்ல. நான் ஒன்றும் குற்றவாளி ஆகிவிடமாட்டேன்.

விஷமப் பிரசாரம்

இந்த எம். கே. டி. சுப்பிரமண்யம் ஊர்ஊராகச் சென்று கூறுகின்றாராம். அந்தப்பணம் என்ன ஆயிற்று? இந்த பணத்துக்குக் கணக்குஎன்ன என்று உங்களுக்குத்தெரியுமா? எல்லாம் கொள்ளை போகின்றது. பெரியாருக்குப்பின் சுயமரியாதை இயக்கத்தின் சொத்துக்களை எல்லாம் கோர்ட்டுக்குச்

சென்று கைப்பற்ற வேண்டி இருக்கும். லட்சக்கணக் கான ரூபாய்கள் பெறுமான சொத்தானபடியால் வழக்காடவும் பணம் வேண்டும்.இதற்காக இப்போது முதலே ஏற்பாடு செய்ய வேண்டும். என்று கூறியுள் ளாராம். என்னிடம் ஆதாரமே இருக்கிறது.

இந்த ராமசாமி என்பவர் நாத்திகம் பத்திரி கையில் கன்னாபின்னா என்று எழுதுகின்றார். அது பத்திரிகையே அல்ல. லட்சுமிகாந்தன் பத்திரிகையே இதைவிடமேல் என்று கூறும் அளவு தன்மை உள்ளது.

எதிர்ப்புக்கு அவசியம் என்ன?

தோழர்களே ! எனக்கு ராஜாஜி எதிர்ப்பு ஏற் பட்டது என்றால் அதில் நியாயம் உள்ளது,

அவர், அவரினத்துக்குப் பாடுபடுவதும் நம் இனத்தை தலை எடுக்க ஒட்டாமல் அழுத்தி வைக்க வேண்டும் என்ற லட்சியம் உடையவர். மற்றவர்கள் எதிர்ப்பு வரவேண்டிய அவசியம் என்ன? எதிர்ப் பாளர்கள் தாங்கள் எத்தனைநாள் இதில் இப்படியே இருப்பது? தங்கள் வசதிக்கு இங்கு இடம் இல்லை என்றுதானே இப்படி செய்கின்றார்கள்?

நான் யாருக்கும் விரோதியல்ல.

நான் யாருக்கும் விரோதி அல்ல. நான் இன்னும் எத்தனை நாள் இருக்கமுடியும்? ஒருவருஷமோ,ஆறு மாதமோ, அதற்குள்ளாக ஸ்தாபனத்துக்கு, சொத்

துக்கு பந்தோபஸ்து செய்துவிட்டுப் போகவேண்டாமா? இப்படிப்பட்ட சதி, எதிர்ப்பு, இப்போதே ஏற்பட்டு விட்டதால் பலமான ஏற்பாடு, கட்டுப்பாடு செய்ய வேண்டியவனாகி விட்டேன்.

சொத்து சேர்த்த கஷ்டம் எனக்குத்தெரியும், அதில் என் சொந்த சொத்து எவ்வளவு என்பது எனக்கும் பலருக்கும் தெரியும். நாத்திகம் பத்திரிகையில் எழுதுகின்றார். என்னைச்சுற்றி உள்ளவர்கள் சொத்தை பங்கு போட்டுக்கொள்ள திட்டம் போடுகின்றார்கள், என்று. "மணிஅம்மைக்குஇந்தசொத்து, சுப்பையர்வுக்கு அந்த சொத்து, வீரமணிக்கு அது" என்றும் இன்னும் என்ன என்னவெல்லாமோ எழுதுகின்றான்.

கழகத்துக்கு சொத்து சேர்க்க எவ்வளவு கஷ்டம்?

தோழர்களே! நான் பணம் சேர்க்கபட்ட கஷ்டம் உங்களுக்கு எல்லாம் தெரியாதா? இன்று கழகத்துக்கு 15 லட்சம் பெறுமான சொத்து வளர்த்து இருக்கின்றேன்.

சென்னையில் 2½ ஏக்கர் காலி இடம் சுமார் ஒரு லட்சத்துக்கு வாங்கினேன். அது சென்ற வருஷம் 3 லட்சத்துக்கு விலைக்குக் கேட்கப்பட்டது. ஆதித்தனாரே அதிக விலைக்குக் கேட்டார்,

நான் சம்மதிக்கவில்லை, அதில் 60-70 ஆயிரம் செலவு செய்து கட்டிடம் கட்டப்பட்டு இன்று அரை குறையில் நிற்கின்றது. இந்த குருசாமியை நம்பித் தான் முன்பின் தெரியாத ஆளுக்கு காண்டிராக்ட் விட்டேன். நானும் கவனிக்கவே இல்லை. பொர்சு செய்து கொடுக்கச்சொன்ன அவர், ஒருதடவைகூடப் போய்என்ன ஆயிற்றுஎன்று பார்க்கவில்லை. காண்டிராக்ட் காரர் நோட்டீசு கொடுத்து உள்ளார். கோர்ட்டுக்குப் போகவேண்டி வந்தாலும் வரும்.

காண்டிராக்ட் கொடுக்கச்சொன்னீர்களே அந்த ஆள் அதிகப்பணம் வேண்டும் என்று நோட்டீசு கொடுத்துள்ளாரே என்று கேட்டதற்கு அதெல்லாம் எனக்குத் தெரியாது என்று கூறிவிட்டாராம்.

சென்ற ஆண்டு 16 ஏக்கரா இடம் ஒரு கட்டிடத்தோடு ரூ 65.000க்கு வாங்கினேன். அதில் 60 ஆயிரம் செலவு செய்து கட்டிடங்கள் கொஞ்சம் கட்டியுள்ளேன். இன்று மாதம் ஒன்றுக்கு ரூ. 1200 வாடகை வருகின்றது. இந்த கட்டிடங்கள் எல்லாம் இரண்டு ஏக்கராவில்தான். 14 ஏக்கரா மிச்சம் இருக்கின்றது. அதில் 50,000 செலவழித்து தொழில் பயிற்சிப் பள்ளிக்கான கட்டிடங்கள்கட்டிக் கொண்டு இருக்கின்றேன். இன்றையநிலையில் இரட்டிப்பு விலைபெறும். திருச்சி மாளிகைப் புள்ளி 2 லட்சம் பெறும்.

ஈரோட்டில் 50 ஆயிரத்துக்கு இடம் வாங்கி மேற்கொண்டு 40-50 ஆயிரம் செலவு செய்து உள்ளேன். மற்றும் அங்குள்ள சொத்துக்கள் சேர்த்து 2 லட்சம் பெறும். இதுபோல ஸ்தாபனத்திற்கு சொத்தை பெருக்கிக்கொண்டே தான் உள்ளேன். பல இலட்சக்கணக்கில் என் சொந்த சொத்துக்களை விற்று இதற்கு சேர்த்து இருக்கிறேன். நான் இதை எல்லாம் பற்றி இது பொதுக்கூட்டம் ஆனபடியால் பேசவிரும்பவில்லை என்றாலும் முன்பேசிய தோழர்கள் கிளப்பி விட்டுவிட்டார்கள், ஆகவே இதுகள்பற்றிச் சிறிது சொல்லவேண்டியவனானேன்,

இது சமுதாய நல ஸ்தாபனமே

இப்போது பொதுவிஷயத்துக்கு வருகின்றேன். கழகக் கொள்கைகள், நடப்புக்கள் பற்றி மக்களுக்குத்தெளிவாக விளக்கவேண்டும். எங்கள் கழகம் ஒரு அரசியல் ஸ்தாபனம்அல்ல. சமுதாயத்திலுள்ளகுறைபாடுகளைப் போக்கப் பாடுபடும் ஸ்தாபனமாகும். இந்த சமுதாய சம்பந்தமாகப் பாடுபடும் ஸ்தாபனம் எங்கள் ஒரே கழகம்தான் உள்ளது.

"நீங்கள்தான் சமுதாய சம்பந்தமான கட்சிக்காரர் ஆயிற்றே. பின் எதற்காக அரசியல் ஸ்தாபனமான காங்கிரசை தேர்தலில் ஆதரித்தீர்கள்" என்று கேட்கலாம்.

கேடு தரும் ஆட்சிவராமற் காப்பதும் கடமை

எங்களுடைய சமுதாய சம்பந்தமான காரியம் நடைபெற நன்மை செய்யாதவர்கள் வந்தாலும் கேடு செய்பவர்கள் வரக்கூடாதே என்பதற்காகவே காங்கிரசை ஆதரித்தேன். மக்களுக்கு எடுத்துச் சொல்லிப் பாடுபட்டேன்.

நான் விரும்பியபடி மீண்டும் தமிழகத்தின் முதல்அமைச்சராக காமராசர் வந்து அமர்ந்து உள்ளார். அதுவே எனக்கு மிக்க திருப்தி அளிக்கின்றது. நாங்கள்தேர்தலில்பிரவேசிக்காதுஇருந்திருந்தால் தேர்தல் முடிவுகூட விபரீதமாக ஆகி இருக்கக்கூடும்.

காங்கிரஸ்காரர்கள்பலர் காங்கிரஸ் தோற்கட்டும் என்றே பாடுபட்டார்கள், காங்கிரசுக்காரருக்கு அடங்கிய அதிகாரிகளும் பாடுபட்டார்கள். முஸ்லிம்கள், பார்ப்பனர்கள் கட்டுப்பாடாக பாடுபட்டார்கள். ஆகவே காங்கிரஸ் தோற்று இருந்தால் என்ன நிலைமை ஏற்பட்டிருக்கும்? காங்கிரஸ் ஜெயித்து காமராசர் வராமலிருந்தால் நிலைமை என்ன ஆகி இருக்கும்?

காங்கிரசு தோற்றிருந்தால் பார்ப்பான் ஆட்சிதானே?

மற்றும் காங்கிரஸ் தோற்று கண்ணீர்த்துளி வெற்றி பெற்று இருந்தால் என்ன ஆகிஇருக்கும்?

திரு. அண்ணாதுரையே பார்ப்பனருக்கு வாக்கு கொடுப்பதில் "எங்கள் கட்சி (க. து.) ஜெயித்தால் ஆச்சாரியார் சொல்படி தான் நாங்கள் ஆட்சி நடத்து வோம்" என்று ஒன்றுக்கு மேற்பட்டதடவைகளில் உறுதி கூறி இருக்கின்றாரே? ஆகவே இந்த நிலையில் நாங்கள் கை கட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்க முடியுமா?

கழகத்தின் முக்கிய குறிக்கோள்

தோழர்களே! சுயமரியாதை இயக்கம், திராவி டர்கழகம் எதற்காக தோற்றுவிக்கப்பட்டது? பார்ப்பனர் அல்லாதார் கல்வி, உத்யோகம் முதலிய வைகளில் மேல்நிலை அடையவும், இனஇழிவு, மூட நம்பிக்கை ஒழிக்கவும் தானே?

இன்றைய காமராஜர் ஆட்சியில் எல்லோருக்கும் படிப்பு. எல்லாவகுப்பாருக்கும் எல்லாஉத்யோகமும் கொடுக்கப்படுகின்றது! 1900 ஆண்டில்நமது மக்கள் 100க்கு 7பேர்களே படித்து இருந்தார்கள். 1910ல் 7½ பேர். 1920ல் 8பேர்கள். 1930ல் 9பேர்கள். 1940ல் 10பேர்! இப்படித்தானே படித்து இருந்தார்கள்?காம ராஜர் பதவிக்கு வருமுன் 15பேர்களே படித்து இருந் தார்கள். காமராஜருக்குமுன் பதவியில் இருந்த ராஜாஜி இப்படி 15 பேர்கள் படித்து இருப்பதை 10 ஆகக் குறைக்கவே அன்றைய தினம் இருந்த 15000 பள்ளிகளில் 6000 பள்ளிகளை மூடினார். ஒரு நேரம்

படிப்பு; மறுநேரம் குலத்தொழில் படிக்க வேண்டும் என்று உத்தரவுபோட்டார்!

கழகக் கிளர்ச்சியால் விளைந்தநன்மை

எங்களின் கிளர்ச்சி காரணமாக ராஜாஜி பதவியைவிட்டுப் போகும்படி நேர்ந்தது. அப்போது பதவிக்குவந்த காமராசர் ஆச்சாரியார் மூடிய 6000 பள்ளிகளையும் திறந்து மேற்கொண்டும் பல்லாயிரக் கணக்கில் பள்ளிகளை ஏற்படுத்தியுள்ளார். இன்று ஒட்டுமொத்தம் 30000 ஆரம்பப்பள்ளிகளுக்கு மேல் உள்ளது. சம்பளத்தை எஸ். எஸ். எல். சி. வரை எடுத்து விட்டார்! ஆரம்பப்பள்ளிப் பிள்ளைகளுக்கு ஒருவேளை சோறு துணி முதலியன கொடுக்க வகை செய்துள்ளார். ஆச்சாரியார் காலத்தில் மொத்தம் 500 உயர்நிலைப்பள்ளிகளே இருந்தன. 1000பேருக்கு ஒருவர் எஸ். எஸ். எல். சி. படித்தால் போதும் என்று கூறினார். உயர்நிலைப் பள்ளிகளே புதியதாக தேவை இல்லை என்று கூறினார்.

காமராசர் ஆட்சி நிலைத்து கல்வி மலர்ந்தது

இன்றைய தினம் காமராசர் ஆட்சியில் 1500 உயர்நிலைப்பள்ளிகள் உள்ளன. 5 மைல்களுக்கு ஒரு உயர்நிலைப்பள்ளி. சிலஇடத்தில் 3மைலுக்கு ஒன்று. ஏன் ? ஒரு மைலுக்கு ஒன்று கூட ஏற்பட்டுஉள்ளது !

பள்ளியில்லா ஊரில்லை.

ஆரம்பப்பள்ளிகள் இல்லாத கிராமமே கிடையாது என்று கூறும் அளவு பள்ளிகளை ஏற்படுத்தியுள்ளார். 300 பேர்கள் வசிக்கும் படியான கிராமங்களுக்கு எல்லாம் கூட பள்ளி ஏற்படுத்தியுள்ளார்.

இப்படி எல்லாம் செய்வது அவர் பிள்ளை குட்டி படிக்கவா ? அல்லது அவர் நாடார் ஜாதி படிக்கவா ? எல்லா மக்களுடைய நலனுக்கும் ஆகத்தானே ?

எங்கள் சமுதாயப்பணி

நான் சாதிக்கு ஆதாரமான கடவுள், மதம், சாஸ்திரம், பார்ப்பான் இதுகளை ஒழித்து சாதியை ஒழிக்கின்றேன் என்று தொண்டாற்றுகின்றேன் என்றும், தாம் மக்களுக்கு கல்வி கொடுப்பது மூலம் சாதியை ஒழிக்கப்போவதாகவும் கூறிக் கொண்டு செய்கிறார்.

இன்று எல்லா வகுப்பாருக்கும் எல்லா உத்யோகமும் இவர் ஆட்சியில் கிடைக்கின்றது. அதற்கு முன் பெரிய உத்யோகம் எல்லாம் பாப்பானுக்குத்தான். நமக்கு பியூன் வேலை! கான்ஸ்டபிள் வேலை! இது தான். இன்று தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு எல்லாம் பெரிய பெரிய உத்யோகம் அளிக்கின்றார்.

தாழ்த்தப்பட்ட ஒருவர் முனிசீஃபாகவோ, ஜட்ஜாகவோ இருந்து பார்ப்பான், சாஸ்திரி வக்கீ

லாக இருந்தால் ஜட்ஜைப் பார்த்து (பிரபுவே) என்று கூறி ஆகவேண்டுமே;

தாழ்த்தப்பட்ட ஒருவர் போலீஸ். ஜில்லா சூப்ப ரிண்டெண்ட், அவர் கீழேபார்ப்பான் சர்க்கிளாகவோ **S. I.** ஆகவோ இருந்தால் தாழ்த்தப்பட்ட சூபரிண் டெண்ட், ஏ சர்க்கிள் ! ஏ எஸ். அய்.! என்று கூப்பிட் டால் எஜமான் என்று தொடைதட்டி சலாம்அல்லவா போட வேண்டும்? இன்றுஅப்படித்தானே உத்யோகம் கொடுத்துக் கொண்டு வருகின்றார். இதனால் பார்ப் பான் வயிறு வேகின்றது. எனவே இந்த ஆட்சி நமது இனத்துக்குக்கேடானது. ஒழித்தாக வேண்டும் என்று வெளிவந்து இருக்கின்றார்கள்.

பார்ப்பான் ஆட்சிக்கு நம்மவன் துணை போகலாமா?

இப்படி பார்ப்பனர் முயற்சி செய்யும்போது அவர்களுக்கு நம்மவன் துணை போகலாமா? நீங்கள் சிந்திக்க வேண்டும். எதற்காக இந்த ஆட்சியைப் பார்ப்பானுடன் சேர்ந்து கொண்டு ஒழிக்க வேண்டும் என்கின்றீர்கள்? காரணம் வேண்டாமா?

இப்படிப்பட்டவர்களுக்கா பொதுமக்கள் ஓட்ட ளிப்பது ? என்று எடுத்துரைத்தார்கள்.

ஆளுங்கட்சிக்கே ஆதரவு அளியுங்கள்

மேலும் பேசுகையில் வருகின்ற முனிசிபல் தேர்

தலில் ஆளும்கட்சியினர்களே பதவிக்குவரும்படியாக மக்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். கண்ணீர்த்துளிகளை வரவிட்டால் சென்னை கார்ப்பரேஷன் போலத்தான் பணம் கொள்ளைபோகும்.

இன்று சென்னை கார்ப்பரேஷனில் வந்த மேயர்கள் எல்லாம் லட்சம் லட்சமாக கொள்ளை அடிப்பதும் கவுன்சிலர்கள் மாதம் ஆயிரக்கணக்கில் கொள்ளை அடிப்பதும் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று எடுத்துரைத்தார்கள்.

மேலும் பேசுகையில் கண்ணீர்த்துளிகளின் விலைவாசிப் போராட்டங்களைக் கண்டித்தும், மக்கள் விழிப்புடன் நடந்து கொள்ள வேண்டிய அவசியம் பற்றியும் தெளிவுபடுத்திப் பேசினார்கள்.

ஒழிக்கப்பட வேண்டியவைகள்

மக்களிடம் உணர்ச்சி, ஒழுக்கம் ஏற்படவேண்டுமானால் சினிமா ஒழிக்கப்படவேண்டும்.

நீதி, நேர்மை ஏற்படவேண்டுமானால் வக்கீல்முறை ஒழிக்கப்படவேண்டும்.

நாட்டில் காலிகள், அயோக்கியர்கள், ஒழிக்கப்பட வேண்டுமானால் பத்திரிகைகள் ஒழிக்கப்படவேண்டும்.

அரசியலில் நல்ல ஆட்சியும் நாணயமும் ஏற்பட வேண்டுமானால் தேர்தல் முறை ஒழிக்கப்படவேண்டும்.

வியாபாரத்தில் நாணயக்குறைவும், கள்ள வியாபாரமும் ஒழிக்கப்பட வேண்டுமானால், லைசென்ஸ், பெர்மிட், கட்டுப்பாடு முறை ஒழிக்கப்பட வேண்டும்.

தொழில் துறையில் தொழிலாளரிடையே சுமுகமும், நாணயமும், பொறுப்பும் ஏற்படவேண்டுமானால் லாபத்தில் பங்கு கொடுத்து, தொழிலாளர் சட்டம் ஒழிக்கப்பட வேண்டும்.

அய்க்கோர்ட்டில் சமூக நீதி வேண்டுமானால் பார்ப்பனரை ஜட்ஜாக நியமிப்பதும், அய்க்கோர்ட் நீதிபதிகளை சுப்ரீம் கோர்ட்டுக்கு ஜட்ஜுகளாக்குவதும் ஒழிக்கப்பட வேண்டும்.

ஈ. வெ. ராமசாமி

பொதுத் தொண்டு!

[தந்தை பெரியார்]

பொதுத் தொண்டு, அதாவது உண்மையான பொதுத் தொண்டு — தன்னை, தன்னலத்தை அடியோடு மறந்து தன்னைத் தவிர்த்த மற்ற மனித சமுதாய நலத்திற்கென்றே மனிதன் பொதுத் தொண்டு செய்வது என்பது இயற்கைக்கு மாறுபட்ட காரியமேயாகும்.

ஜீவன் என்பதே சுயநலம் என்ற தத்துவத்தைக் கொண்டதேயாகும்.

எந்த ஜீவனும் எப்படியாவது தான் வாழ வேண்டும் என்ற அடிப்படையில் தான் வாழ்கிறது —ஜீவிக்கிறது என்கின்ற தன்மையில் தான் வாழ்கிறது. அதற்கேற்றபடிதான் நடக்கிறது. இதற்கு மாறான ஜீவனைக் காண முடியாது.

மனித ஜீவனும் இதே தத்துவத்திற்கு நியதிக்கு ஆட்பட்ட ஜீவனேயாகும்.

மனிதனுக்கு பொதுத் தொண்டு செய்ய வேண்டுமென்பதற்கு ஒரு அவசியம் வேண்டுமே அப்படி என்ன அவசியமிருக்கிறது?

வாழ்வுக்கு அவசியமான தேவைகள்

பிறந்த மனிதன் வாழவேண்டும். முதலாவதாக உயிர் வாழ வேண்டும். இது குழந்தைப் பருவத்திலேயே ஏற்பட்டு விடுகிறது. உயிர் வாழ வேண்டுமென்றால் ஜீவிக்கவேண்டும். ஜீவிக்க வேண்டுமென்றால் உணவு கொள்ளவேண்டும். இந்த விளக்கம் குழந்தைகளுக்கு ஏற்படாதுதான். ஆனால் அதற்கு ஆகவே பசி என்கிற உபாதை— நோய் (பசி நோய்) இயற்கையாகவே ஏற்பட்டு, அழுவது, அலைவது என்கின்ற தன்மை இருந்து

வருகின்றது. அறிவு வந்த மனித ஜீவனும் எப்படி யாவது உணவு கொள்ளவேண்டும் என்கின்ற ஆசைக்கு ஆக, அவசியத்துக்கு ஆகவே வாழ வேண்டியவனாகி விடுகிறான்.

பிறகு உணவு பெற்று திருப்தியடைந்த பிறகு உறக்கத்திற்குப் பாடுபடுகிறான். பிறகு படிப்படி யாக உடை, தங்குமிடம், அதற்குப் பிறகு காம உணர்ச்சிக்குப் பரிகாரம் இவ்வைந்தோடு மனித னின் இயற்கைத் தேவை முடிந்து விடுகிறது.

பிறகு சுற்றுச் சார்பு—"சார்ந்ததன் வண்ணம்" (சவகாசம்) ஊர் நடப்பு முதலியவைகளால் படிப் படியாய் ஆசை, இயற்கையான ஆசை ஏற்படு கிறது. இது கை கூடுவதற்கு என்ன என்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்யத் துணிந்து விடுகிறான். இதுவும் மனித இயற்கையாகி விடு கிறது.

இந்த இயற்கை மனிதனுக்கு பிள்ளை, குட்டி, உடமைகளை உண்டாக்கி விடுகிறது. இவை களைக் காப்பாற்றுவதும் இயற்கையேயாகி விடுகி றது. இவற்றிற்கும் மேலாக மனிதனுக்கு கவுரவம், பெருமை, புகழ் வேண்டியதாக ஆகி விடுகிறது. பிறகு அதுவும் இயற்கையே ஆகிவிடுகிறது.

இவ்வளவு இயற்கைத் தேவைகளையும் பூர்த்தி செய்ய மனிதன் என்ன வேண்டுமானாலும் செய் யலாம்; செய்தாக வேண்டும் என்கின்ற தத்துவம் மனிதனுக்கு சட்டமாய் விளங்குகின்றது.

தேவைகளைப் பூர்த்தி செய்வதில் உட்பட்டதே பொதுத் தொண்டு

இவற்றிலிருந்து, இந்த சட்டத்திற்கும் புறம் பான சமுதாய மனிதன் உலகத்திலேயே கிடை யாது என்பது எனது தாழ்மையான கருத்து. அப்படி யாராவது இருந்தால் அது இயற்கைக்கு விரோதமான தோற்றம் என்றுதான் சொல்ல

வேண்டும். ஏன் சொல்லவேண்டும் என்றால், அப்படி இயற்கைக்கு விரோதமாய் இருக்க என்ன அவசியம்? என்பதை சிந்தித்துப் பார்த்தால் அந்தப்படி இருக்க சாதாரண நிலையில் யாரும் இருப்பதாய்க் காணப்பட மாட்டார்கள்.

மேற்கண்ட மனிதனின் இயற்கைத் தன்மைகளான தேவைகள் பூர்த்தியாக மனிதன் ஏது வேண்டுமானாலும் செய்து பூர்த்தி செய்து கொள்வது மனித இயற்கை என்று சொல்லப்பட்ட ஏது வேண்டுமானாலும் என்பதில் அடங்கிய பல காரியங்களில் பொதுத்தொண்டு என்பதும் ஒன்றாகும்.

பலவகைப் பொதுத் தொண்டுகள்

அதாவது கஃகூசு எடுப்பதும் பொதுத் தொண்டேயாகும். ஆனால் எதற்காக அந்தப் பொதுத் தொண்டு செய்யப்படுகிறது என்றால் மேற்கண்ட இயற்கைத் தேவைகள் பூர்த்தியாவதற்கேதான் என்பது போலவே மனிதன் பொதுத் தொண்டையும் ஒரு சாதனமாகக் கைக்கொள்ளுகிறான். இந்த பொதுத் தொண்டுகளில் தாசி பிழைப்பும் ஒரு பொதுத் தொண்டு காரியந்தான். வக்கீலும் ஒரு பொதுத் தொண்டுக்காரன்தான். வியாபாரியும் ஒரு பொதுத் தொண்டுக்காரன் தான். அதுபோலவே அரசியல், சமுதாய இயல், தெய்வீக இயல், பத்திரிகை இயல், நடிப்பு இயல் முதலிய காரியங்களில் ஈடுபடுபவர்களும் பொதுத் தொண்டுக் காரர்கள்தான். இவர்கள் எப்படிப்பட்ட பொதுத் தொண்டுக்காரர்கள் என்றால் மேலே காட்டப்பட்ட மனித வாழ்வுக்காக செய்யப்படும் இயற்கைக் காரியங்கள் என்பவைகளில் இந்த இயற்கைக் காரியங்களை, தேவைகளைப் பூர்த்தி செய்ய எது வேண்டுமானாலும், என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற சட்டப்படி ஏற்பட்ட பொதுத் தொண்டர்களே யாவார்கள்.

இந்த, மேலே காட்டிய தாசி, வக்கீல், வியாபாரி, அரசியல், சமுதாய இயல், தெய்வீக இயல், பத்திரிகை இயல் முதலிய துறைகளில் ஜீவனம் வைத்துக்கொண்டு இருப்பவர்களுக்கு ஏற்பட்ட இயற்கையான குணம் என்னவென்றால், இவர்கள் இத்தனை பேர்களுக்கும், இத்தனை பேர்களிடத்திலும் உண்மை, ஒழுக்கம், நாணயம், நேர்மை, நன்றி, மானம், ஈனம், தயவு, தாட்சண்யம் முதலிய "நற்குணங்கள்" என்று சொல்லப்படுகிற எந்த குணமுமே இருக்காது; இருக்க முடியாது. இருந்தால் அது இயற்கைக்கு விரோதமேயாகும்.

உண்மையான பொதுத் தொண்டுக்கு ஒரு பரீட்சை

இது எப்படிப் பார்த்தால் விளங்கும் என்றால் இதில் ஈடுபட்டவர்கள் யார்? இவர்களுக்கு ஜீவனம் என்ன? இவர்கள் இதற்கு முன் எந்த நிலைமையில் இருந்தவர்கள்? என்ன பரம்பரை? வாழ்க்கையில் முதல் முதல் புகும்போது என்ன தொண்டில் இறங்கினார்கள்? பிறகு இதற்கு ஏன் வந்தார்கள்? இவர்கள் பொதுத் தொண்டில் புகும் போது என்ன அந்தஸ்து? என்ன தகுதி? எவ்வளவு செல்வம்? அப்போதைய கொள்கை என்ன? இப்போதைய கொள்கை என்ன? எத்தனை மாற்றம் அடைந்தார்கள்? அதனால் என்ன அடைந்தார்கள்? "பொதுத் தொண்டின்" உண்மையான லட்சியம் ஏதாவது உண்டா? அப்படியானால் அந்த லட்சியம் என்ன? அந்த லட்சியம் யாருக்காக? எந்த மக்களுக்காக? அதில் உண்மை நேர்மையுண்டா? இப்படிப்பட்ட தொண்டுகளால் இவர்கள் அடைந்த நட்டம் என்ன? இலாபம் என்ன? இவைகளில் எது பெரிது? இவர்களுக்கு பெண்டு பிள்ளைகள் இருக்கின்றனவா? அவர்கள் படிப்பு வாழ்வு

ஆகியவைகளுக்கு இவர்களுக்கு உள்ள சொந்த வசதி வாய்ப்பு என்ன? இவர்களது இன்றைய வாழ்வுக்கு எந்த வழியில் தேடிய, அடைந்த பொருளைக் கொண்டு என்ன செய்யப்பட்டது?— என்பது போன்ற பரீட்சைகளை வைத்து பார்த்தால் எந்த பொதுத் தொண்டனும் மிஞ்சவே மாட்டான்.

அனேகமாய் எல்லா பொதுத் தொண்டனும் கன்னக்கோல், கத்தரிக்கோல் பொதுத் தொண்டர்களை விடக் கீழ்ப்பட்ட தொண்டர்களே யாவார்கள்.

பொதுவாகச் சொல்லப்பட வேண்டுமானால் நாட்டில் மனித சமுதாயத்தில் இன்று நிலவி வாழ்ந்து வளர்ந்து பெருகிவரும் எல்லா கூடா ஒழுக்கங்களுக்கும், பொய், பித்தலாட்டம், நாணயக் குறைவு, துரோகம், சதி, நன்றிகெட்டத்தனம் முதலான ஈனக் காரியங்களுக்கும் இந்த வகை பொதுத் தொண்டே காரணம் என்பேன்.

நேர்மைத்தன்மைகள் மறைந்த கா்ரணம்

பொதுத்தொண்டின் இலட்சணம் இந்தமாதிரியாக அடைந்து விட்டதாலேயே பொதுவாக மனித சமுதாய ஒழுக்கம், நேர்மை, நாணயம் முதலிய தன்மைகள் ஒழிந்து நேர்மாறான தன்மைகள் வளர்ந்துகொண்டே வருகிறது.

உதாரணமாக, கடவுள் தன்மை என்பது பொது அயோக்கியத் தன்மைகள் தஞ்சமடைய பாதுகாப்பு ஸ்தலமாக ஆகிவிட்டது.

தண்டனை (ஜெயில்) தன்மை, அயோக்கியர்கள், காலிகள் இளைப்பாறி உடலைத் தேற்றிக் கொண்டு திரும்பும் சுகவாச ஸ்தலமாகி சுகாதார ஸ்தாபனமாக ஆகிவிட்டது.

கோர்ட்டு, நீதி ஸ்தலத்தன்மை, மனிதனை எப்படி எப்படி நேர்மைக் கேடான காரியம் செய்ய

லாம்; செய்துவிட்டு எப்படி தப்பித்துக் கொள்ள லாம் என்பதைக் கற்றுக்கொடுக்கும் கல்லூரியாக ஆகிவிட்டது.

பத்திரிகைகள் தன்மை, காலிப்பயல்களையும் அயோக்கியர்களையும், மக்கள் துரோகிகளையும் மடையர்களையும் பெரிய மனிதர்கள்—மகான்கள்—தேசபக்தர்கள் மேதாவிகள் ஆக்கும் சலவை சாலைகளாக ஆகிவிட்டது.

ஜனநாயகம் என்பது காலிகள், அயோக்கியர்கள் எப்படியாவது பணம், பதவி, சம்பாதிக்கும் ஒழுக்கமற்ற செல்வர்கள், பதவியாளர்கள் ஸ்தாபனமாக ஆகிவிட்டது.

நல்ல தலைவர்கள் கிட்டாத காரணம்

பொதுத்தொண்டு போனபோக்கானது இன்று நாட்டுக்கு ஒரு சம்பிரதாயமான தலைவனில்லாமல் போய்விட்டது. முன்பு தலைவர், தலைவர்கள் என்றால் அது தானாகவே மக்கள் உள்ளத்தில் புகுந்து யாரையாவது தலைவர் என்று கருதச் செய்யும். அந்தப் பதவியையும் யாரோ சிலர் வெகு சிலர்தான் விரும்புவார்கள். அவர்களும் நாடொப்பிய தலைவர்களில் ஒருவராக இருப்பார். மக்களும் தலைவராகக் கருதுவார்கள்; மதிப்பார்கள். இப்போது ஒவ்வொருவனும் தனது வாழ்க்கைப் பிழைப்பை மாத்திரம் முன்னிட்டே கவுரவத்தைக்கூட கருதாமல் தலைவனாக முயற்சித்து கூலி ஆட்களைப் பிடித்து தன்னை தலைவனாக ஆக்கச் சொல்லுகிறான்; செய்து கொள்ளுகிறான். அதற்கேற்ற கீழ்மக்களும் எவ்வளவு கிழவனானையும் சுயநல பதவி, பணத்தாசைக்காரனையும் தலைவனாக்கக் கூப்பாடு போடுகிறார்கள். பத்திரிகைக்காரர்களும் இந்த இழிதன்மைக்கு முழு முயற்சியோடு ஒத்துழைக்கிறார்கள். ஆனதினா

லேயே நாட்டில் உண்மைத் தலைவர்களே இல் லாமல் போய்விட்டார்கள்.

பொதுத் தொண்டுக்கு நல்ல ஸ்தாபனங்களுமில்லை

நாட்டில் யோக்கியமான, உண்மையான பொதுத் தொண்டு ஸ்தாபனமே இல்லாமற் போய் விட்டது. எந்த ஸ்தாபனமும் யாரோ குறிப்பிட்ட ஒரு சிலர் பிழைக்க வேண்டும் என்பதல்லாமல் நாட்டுப் பொதுமக்கள் நலனுக்கு என்று ஒன்று கூட ஏற்படவில்லை; இந்நாட்டில் ஏற்பட்ட தில்லை.

இன்றுள்ள பொது ஸ்தாபனங்கள் என்பவை கள் சூதாடு மிடமாகவே, "மேஜைக்காசு" வாங்க ஏற்பாடு செய்யப்பட்ட சூதாடுமிடங்கள் போலவே இருந்து வரவேண்டியவைகளாக அமைக்கப்பட்டு விட்டன. இவை மாத்திரமல்லாமல் இந்நாட்டு மக்கள் நலத்துக்கு முன்னேற்றத்திற்குமான வாழ் வுக்கு அறிவு வாழ்வுக்கு ஏற்ற கொள்கைகளோ, லட்சியங்களோ இந்நாட்டில் யாராலும் ்கையாளப் படுவதில்லை. எவரும் அந்த துறையை அணுக பயப்படக் கூடியவர்களாகவே அதாவது "அத னிடம் அக்கொள்கைகளிடம் சென்றால், அணு கினால் நமது வாழ்வே போய்விடுமே, பிழைக்கவே முடியாதே" என்று பொதுத் தொண்டு செய்ப வர்கள் எல்லாம் பயப்பட வேண்டியவர்களாகி விட்டார்கள்.

ஆகவே இதுவரை பொதுத் தொண்டு என் பது மக்கள் சுயநல வாழ்வுக்கு ஆக இந்நாட்டில் இருந்துவரும் பல தொழில்கள், மார்க்கங்கள், என்பவை போலவே பிழைப்பு மார்க்கம்தான் என் றும் இதற்கு எந்த பொதுத் தொண்டரும் விலக்கு இல்லை என்றும் ஏதோ ஒரு அளவுக்கு என் 83 ஆண்டு அனுபவத்தைக் கொண்டு விளக்கினேன். அதோடு கூடவே இதற்கு மாறாக பொதுத்

தொண்டு இருக்குமானால் அது இயற்கைக்கு மாறு பட்டது என்றும் கூறினேன்.

இந்தக் கருத்து நான் வெகு நாளாக சொல்லிக் கொண்டு வரப்பட்ட கருத்தே ஒழிய இன்று புதி தாக சொல்லப் படுவதல்ல.

பொதுத் தொண்டன் ஆக தேவைப்படும் வசதிகள்

மற்றும் உண்மையான பொதுத் தொண்டு செய்ய மக்களில் ஆள் கிடைப்பதும் மிகக் கஷ்டம். மிக மிகக் கஷ்டம் என்றே சொல்லுவேன். யாரா வது இருப்பார்களேயானால் அப்படிப்பட்டவர் மனிதனின் இயற்கை அமைப்புக்கு மாறுபட்டவர் களாகத்தான் இருக்க முடியும். அவன் எப்படிப் பட்டவனாக இருக்க வேண்டும் என்றால்,

முதலாவது, பொதுத் தொண்டனுக்கு சோற் றுக்கு குடும்ப வாழ்க்கைக்கு வகை தேடவேண்டிய அவசியமில்லாத வசதி இருக்கவேண்டும்.

வசதி இல்லாவிட்டாலும் பொதுத் தொண் டையே கொண்டு பிழைக்க வேண்டிய அவசிய மில்லாத ஒரு மார்க்கமாவது இருக்க வேண்டும்.

தனக்கு மாத்திரம் அல்லாமல், தன்னால் போஷணை செய்ய வேண்டிய—பாதுகாக்க வேண்டிய நபர்கள், பளுவுகள் இருக்கவே கூடாது.

தன்னால் பாதுகாக்க, பெருக்க வேண்டிய பெரிய தொழில் பெரிய சொந்த சொத்தும் இருக்கக் கூடாது. இருந்தால் எதிரிகளுக்கு பயந்து இலட்சி யத்தை விட்டு கொடுக்க நேரும். மனைவி, பிள்ளை குட்டிகள் இருக்கக் கூடாது; இருக்கவே கூடாது.

"காணப்படும் பொருள்களில் உயிர் பிரியமாம்
உயிரினும் மக்கள் பிரியமாம்
இவற்றைப் பாதுகாக்க எதுவும் செய்யலாம்."

—ஆய்ந்த பழமொழி

ஏனெனில் அவற்றைப் பாதுகாக்க வேண்டுமே, வளர்க்க வேண்டுமே, படிக்க வைக்க வேண்டுமே உத்தியோகம் தேடிக்கொடுக்க வேண்டுமே என்கிற எண்ணத்தினால் எப்படிப்பட்டவனும் பொதுத் தொண்டுக்கு அயோக்கியனாகியே விடுவான். பொதுத்தொண்டன் அல்லாத, சுயநலத் தொண்டனான மனிதன் எவனும் பிள்ளைகுட்டிகள் இருந்தால் சுயநல வாழ்விலேயே, அவனுக்கு எவ்வளவு வசதி இருந்தாலும் அயோக்கியன்ாகி விடுகிறான். அப்படி யிருக்கும்போது வசதி இல்லாதவன் அவற்றின் (பிள்ளை குட்டிகள்) வாழ்வுக்கு வளர்ச்சிக்கு அயோக்கியத்தனம் செய்ய முடியாமல் எவனாலும் இருக்கவே முடியாது. பொதுத் தொண்டுப்பணியில் இருந்து தன் வயிற்றுக்கு—வாழ்வுக்கு மாத்திரம் வகை செய்து கொள்பவனையே கூட இரண்டாந்தரம், விலக்கு அளிக்கப்பட வேண்டிய தொண்டன் என்றுதான் சொல்லுவேன்.

பொதுத்தொண்டன் என்று கூறத் தகுதி என்ன ?

எந்தப் பொதுத் தொண்டனுக்கு ஆவது மனைவி இருக்கிறது மக்கள் இருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு குடும்பத்தில் வசதி இருக்க வேண்டும். அல்லது அவர்களும் உணவு, உடை தவிர மற்றெதையும் கருதாத பொதுத் தொண்டர்களாக இருக்க வேண்டும். பொதுத் தொண்டு ஊதியத்தால் வாழ்கிறவர்கள் அவர்கள் குடும்பங்கள் மக்கள் சராசரி வாழ்க்கைத் தரத்துக்குமேல் வாழக்கூடாது; வாழவே கூடாது.

நெஞ்சைத் தொட்டுப்பார்

வாழ வேண்டி வந்தால், வாழ்ந்து கொள், ஆனால் "நான் பொதுத்தொண்டன்" "தியாகி", "கஷ்ட நஷ்டப்பட்டவன்" என்று சொல்லாதே. உன் மனதிலும் நீ சொல்லுவதற்கு வெட்கப்படு.

நினைத்துக் கொள்ளாதே. அப்படி நினைப்பாயே யானால் சொல்லுவாயே யானால் நீ மக்களை ஏமாற்றி வெற்றி பெற்று விட்டதாகக் கருதிக் கொண்டிருப்பவன் என்றுதான் சொல்லவேண்டும்.

மற்றும் இதை ஏன் சொல்லுகிறேன் என்றால் நீ பொதுத் தொண்டன் ஆகாமல் சுயநலத் தொண்டனாக ஆகி உனக்கென்றே நீ பாடுபடு பவனாக ஆகியிருந்தால் இன்று உன் நிலை எப்படி ஆகி இருக்கும்? உன்தரம் அந்தஸ்து என்ன ஆகி யிருக்கும் என்பதை உன் தரத்தைக் கொண்டு உண்மையாய் நினைத்துப் பார்த்து, உன் பொதுத் தொண்டு (வேஷம்) ஆனது உன்னை தியாகம் செய்யச் செய்ததா அல்லது உன் தகுதிக்கு மேற் பட்ட செல்வத்தையும் வாழ்க்கை வசதியையும் அந்தஸ்தையும் தேடிக்கொள்ளச் செய்ததா? என்று எண்ணிப்பார்.

இந்த முறையில் எண்ணிப் பார்த்தால் நாட் டில் எவனாவது பொதுத் தொண்டன், தன்னலத் தை வெறுத்தவன் தியாகி என்பதாக எங்காவது இருக்கின்றானா என்பது தெரியும்.

நான் வெகு பொதுத் தொண்டர்களோடு பழகியிருந்த பழக்கத்தையும் வெகு பேருக்குத் தலைவனாக இருந்து அவர்கள் நடத்தையையும் அவர்களால் அடைந்த பலனையும் அவர்களது போக்கையும், அவர்கள் எதிர்ப்பையும், அவர்கள் இன்று எதிர்பார்ப்பதையும் இலட்சியத்தையும் உணர்ந்தே இதைச் சொல்லுகிறேன்.

எனது பொதுத் தொண்டு வாழ்விலே நான் நெருங்கி உண்மையாகப் பழகிய தோழர்கள்:

இராஜாஜி, கண்ணப்பர், இராமநாதன், கே. ஏ. பி. விஸ்வநாதன், பொன்னம்பலம், அண்ணாத்துரை, சவுந்தர பாண்டியன், பி. பாலசுப்ரமணியம், எஸ். குருசாமி,— முதலியவர்களுடைய பொதுத் தொண்டு தன்மை

யை அனுபவித்தும் உணர்ந்துமே எழுதுகிறேன். மற்றும் இவர்கள் எல்லாம் எனக்கு ஆதரவாக நண்பர்களாக இருந்ததாலேயும் இவர்களுக்கு நான் "தலைவனாக" அவர்களாலேயே கருதப் பட்டதினாலேயும் நானும் இவர்களை குறிப்பிடு கிறேன்.

இதிலிருந்து பொதுமக்கள் என்ன தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறேன் என் றால், பொதுத் தொண்டு என்பதாக ஒன்று, ஒரு தொண்டு இல்லை; பொதுவாக இல்லவே இல்லை.

எவன் அந்தப்பெயரால் தொண்டு செய்வ தாகக் காணப்பட்டாலும் சுய நலத்துக்கு ஆக தெரிந்தெடுக்கும் தொண்டுகளில் (பொதுத் தொண்டு என்பது) அது ஒன்று என்றுதான் கொள்ளவேண்டும். சிலருக்கு துவக்கத்தில் சுய நலம் கருதாமல் பொது தொண்டுக்கு வர எண்ண மேற்பட்டிருக்கலாம். பெண்டு பிள்ளை ஏற்பட் டால் எவனும் சுயநலப் புலிதான்.

என்னைப்பற்றி

என்னைப்பற்றி நீங்கள் "நீயும் அப்படித் தானே" என்று கேட்கலாம். ஆம் நானும் அப் படித்தான். என் தொண்டும் உண்மையில் சுய நலத் தொண்டுதான்.. என்ன சுயநலம்? அவரவர் சொந்த பிள்ளைகுட்டி மனைவி வாழ்க்கை சுய நலம் அல்லாமல் எனக்கு ஒரு திருப்தியையும் இன் பத்தையும் கொடுக்கத் தக்கதும் கம்பீரத்தோடு நானே பெருமைப்படத் தக்கதுமான நலத்தை அளிக்கிறது. அவற்றை நானும் அனுபவிக்கிறேன், இதுதான் என் சுயநலம்.

செல்வத்தைப் பற்றியும் மற்றவர்களை யெல் லாம் விட எனக்குப் பேராசையுண்டு. மற்ற மேற் கண்ட தோழர்களை விட செல்வத்தில் நான் பொதுத்தொண்டின் பேரால் அதிகமான பணம்-

சொத்து சம்பாதித்தவன் ஆவேன். எனது முயற்சியில், தொண்டின் சரிபகுதிப் பாகம் பணம் சேர்ப்பதிலே செலவழிக்கிறேன். சிறுவயது முதலே வாழ்க்கையின் இலட்சணம் பணம் என்றே பழக்கப்பட்டவன் நான்.

பொதுநலத்துக்கே என் சொத்து

இப்படிப்பட்ட நான், "பொதுத் தொண்ட"னாக ஆனபின்பு உண்மையான பொதுத்தொண்டுக்கு என்றே சற்றேறக்குறைய 15 லட்ச ரூபாய் மதிப்பிடத் தக்க பொது செல்வம் சேமித்து இருக்கிறேன். எல்லோருக்கும் தெரியும்படியாகவே சம்பாதித்தே சேர்த்திருக்கிறேன். இதில் என்னுடைய சொந்த சொத்து அதாவது எனக்கு உரிமையான என் சொத்துக்களை விற்று பொதுநலனுக்கு உதவிய வகையில் பெரும்பாகம் கூட சேர்க்கப்பட்டதால் இந்த மதிப்பு ஏற்பட்டதென்றே சொல்லுவேன் (எனதல்லாத) மற்றதெல்லாம் பொது மக்களிடம் இருந்து மாநாடு, கூட்டத்துக்கு அழைப்புக்கு செல்லுதல், கொள்கை புத்தகம் விற்றல், கழகத்துக்கு நன்கொடை என்னும் பேரால் பெற்ற, அளிக்கப்பட்ட வசூல் செய்யப்பட்ட வகையிலும் அவற்றை நானும் பெருக்கிய வகையிலும் சொத்துக்களுக்கு பொதுமதிப்பு ஏறிய வகையிலும் சேர்க்கப்பட்ட செல்வம், சொத்துக்களெல்லாம் இந்த சுமார் பதினைந்து லட்சரூபாய் மதிக்கக் கூடிய சொத்தாகும்.

இந்த சொத்திலும் என் இஷ்டப்படி வேறு யாரும் கேள்வி கேட்க முடியாதபடி, யாருக்கும் கணக்கு காட்டவேண்டிய அவசியமில்லாத சொத்தாக ஒரு நல்ல பாகம் பொதுதொண்டுக்கு இருக்கிறது என்னலாம்.

இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், எனக்கு இவ்வளவு செல்வ வசதி இருந்தும் எனது வாழ்

வானது மக்களின் சராசரி வாழ்வுதான். எனக்கு உணவுச் செலவு மாதம் ரூ. 50-க்குள்தான் ஆகும். எனது துணிமணி செலவு ஆண்டுக்கு ரூ. 50-க்குள் தான் ஆகும்.

அதிலும் பெரும்பகுதி ஓசியில் நடக்கும். இதற்கு செலவு செய்ய வேண்டிய அவசியமும் எனக்கு கிடையாது. (எதனால்) பிள்ளைகுட்டி கிடையாது. மனைவி உண்டு என்றாலும் அவர் கள் மாதம் ரூ. 200 போல் சம்பளம் கொடுத்து வாங்கக்கூடிய வேலையை இயக்கத்திற்கு ஆக இந்த 5 ஆண்டுகளாகச் செய்து வந்ததோடு அதற்கு முன்பாக பதினைந்து ஆண்டாக பல ஆயிரக் கணக்கில் புத்தக விற்பனை மூலம் கழகத் துக்கு பணவருவாயும் அவர்களால் ஏற்பட்டது என்று சொல்வேன். அந்த அம்மையாருக்கும் உணவு செலவு மாதம் 50 ரூபாய், உடை செலவு வருஷம் 150 ரூபாய்க்கு உள்ளாகத்தான் செல வாகும்.

எனது பிரயாணம் சிம்ப்சன் கம்பெனியின் பங்காளித் தோழர் ஆரோக்கியசாமி அவர்கள் சொன்னதுபோல் ஒரு லாரிக்குச் சமமான—சாமான் ஏற்றத்தக்க மோட்டார் வண்டியில்தான்! பிர யாணம், முக்கால் பாகம் இரவில்.

மாதத்தில் 20 நாள் போல சராசரி சுற்றுப் பிரயாணம். சதா கழகத்துக்கு கட்டட வேலை. கழக செல்வத்தை பெருக்கும் கணக்கு வேலை. இது அதிசயமான வேலை. எந்தவிதக் கணக்கும் வைக்காமல் சதா கணக்குப் போட்டுப் பார்க்கும் வேலை! எல்லாம் பெரிதும் டைரிக்குறிப்புத்தான்!!

இந்த நிலையில்......

சில பொறாமைக்காரர்கள் ஏமாற்றமடைந்து வெந்து புழுங்கிக்கொண்டிருப்பவர்கள் ஆகிய கூட்டத்தார் தவிர "எதிரிகள்" என்று கருதப்

பட்டவர்கள் முதல், எந்த மனிதரும் நம்மைக் கண்டவுடன் நான் வெட்கப்படத் தக்கபடி என்னைப் "புகழ்வதும்" "போற்றுவதும்" "அன்பு காட்டுவது"மான தன்மையை இடைவிடாமல் அனுபவிக்கிறேன்.

இவை எல்லாம் எனக்கு சுயநலமல்லாமல் வேறு என்ன பொதுநலம் என்று சொல்லமுடியும்?

எனது இரு கவலைகள்

எனக்கு ஏதாவது கவலை உண்டு என்றால் அது கழகச் சொத்துக்களையும், மற்றும் பொது நலத்துக்கு ஆகவே அளிக்கப்பட்ட பொருள்கள் சொத்துக்கள் ஆகியவைகளைப் பாதுகாத்து அதன் வருவாய்களைக் கழக லட்சியங்களுக்கும் அனாதியாய் பராமரிப்பு இல்லாத மக்களுக்கும் அவர்கள் நல்வாழ்வுக்கும் வகை தரப் பயன்படும் படியாய் செலவு செய்யச் செய்வது எப்படி என்கிற கவலைதான்.

மற்றொரு கவலை என்னவென்றால் இனியும் ஒரு பத்து ஆண்டுகளுக்காவது காமராசர் ஆட்சி நீடித்து நிலைத்து இருக்குமானால் சுயமரியாதை இயக்க வேலை பூர்த்தியாகாவிட்டாலும் திராவிடர் கழக லட்சிய வேலை பெரும் அளவுக்குப் பூர்த்தியாகுமே என்கின்ற கவலைதான்.

பிறந்த நாள் விழாச் செய்தி

மேலால் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டுவிட்டு இதை முடிக்கிறேன்.

அதாவது: எனது ஒவ்வொரு பிறந்தநாள் ஆண்டு விழாவிலும் அடுத்த ஆண்டு முடிவுக்குள் நம் கழகம் செய்யவேண்டிய காரியம் என்ன என்று வேலை திட்டம் தெரிவிப்பது வழக்கம்.

சென்ற சில பிறந்த நாள் விழாக்களில் "அடுத்த ஆண்டு" வேலைத்திட்டம் தெரிவித்தேன் என்றாலும் அந்த ஆண்டுகளை வேலைத் திட்டங்களை காமராஜர் ஆட்சி எதிர்ப்புக்களை

முறியடிக்கின்ற வேலைகளுக்கே பெரும் பகுதி முயற்சியும் நேரமும் செலவழிக்கப்பட்டு சரியாக வேலைத்திட்டங்கள் கவனிக்கப்படவில்லை என்பதை நான் ஒப்புக்கொள்ளுகின்றேன். அதற்கு சமாதானம் என்னவென்றால் காமராஜர் ஆட்சி எதிர்ப்புக்களை முறியடித்து மறுபடியும் அவர் ஆட்சி வரும்படி செய்வதும் வேலைத்திட்ட நிறைவேற்று வேலை என்று கருதியதால் அதை முக்கியமாய் கருத வேண்டியதாயிற்று. இதில் ஓரளவு வெற்றி பெற்றோம் என்றாலும் முழுவெற்றி பெறவில்லை.

ஓர் அளவு வெற்றி என்னவென்றால் எலக்ஷனில் ஜெயித்த ஒருவன் "நான் ஒரு அளவுக்குத்தான் வெற்றி பெற்றேனே ஒழிய முழு வெற்றி பெறவில்லை. முழு வெற்றி பெற்றேன் என்று எப்போது சொல்லலாம் என்றால் எதிரியை டெப்பாசிட் கிடைக்காமல் செய்திருந்தால்தான் முழுவெற்றி. சாதாரணமாய் கிடைக்கக்கூடிய வெற்றிதான்" என்று ஒருவன் சொல்லுவது போன்றே நானும் முழுவெற்றி கிடைக்கவில்லை என்கின்றேன்.

அது போகட்டும் வரப் போகிற ஆண்டுக்கு வேலைத்திட்டமாக:—

ஒழிப்பு வேலை

1. பார்ப்பனப் பத்திரிக்கைகள் ஆணவமும் ஆதிக்கமும் ஒழிக்கப்பட வேண்டும்; குறைக்கப் படவாவது வேண்டும்.

2. சினிமா மோகம், வளர்ச்சி ஒழிக்கப்பட வேண்டும்.

3. கோயில்களில் ஜாதி ஆதிக்கம் ஒழிக்கப் படவேண்டும்.

ஆக்க வேலை

கழகத்திற்கு 25,000 மெம்பர்களுக்கு குறையாமல் சேர்க்கப்பட வேண்டும். கழகத்திற்கு குறைந்தது 500க்குக் குறையாமல் கிளைக் கழகங்

கள் இருக்கச் செய்ய வேண்டும். கமிட்டிகள், மத்தியக்கமிட்டி, மாவட்டக் கமிட்டிகள், அமைக் கப்பட்டு மற்றக் கமிட்டிகள் புதுப்பிக்கப்பட வேண்டும். கழகப் புத்தகங்கள் ரூ. 25,000 க்கு, குறையாமல் விற்கப்பட வேண்டும். பிரச்சாரங் களுக்கு ஒழுங்கு முறை, கட்டுப்பாடு, ஏற்படுத்த வேண்டும்.

கமிட்டிக்கு மேலும் கட்டுத் திட்டங்கள் ஏற் படுத்தப்பட வேண்டும்.

இவைகளை இந்த ஆண்டு வேலைத் திட்டங் களாகக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

குறிப்பு: குறிப்பிடத்தக்க ஒரு விஷயம் என்ன வென்றால், இந்த ஆண்டு கழகத்திற்கும் எனக்கும் பெரிய எதிர்ப்புக்கு ஏற்பாடாகி இருக்கின்றது என்று தெரிய வருகின்றது. வெளியில் இருந்தல்ல; உள்ளுக்குள் இருந்தே தங்களையும் கழகக்காரர் கள், கழக நலனுக்குப் பாடுபடுபவர்கள் என்று சொல்லிக்கொண்டே விஷமப் பிரச்சாரத்திற்கு சாதனங்களையும் கோஷ்டியையும் ஏற்பாடு செய்து கொண்டு ஒரு ஊற்று கிளம்பி இருக்கின் றது. இது வெகுநாள் திட்டமிட்டு திடீர் என்று வெளியாகி இருக்கின்றது.

இந்த எதிர்ப்பை சூழ்ச்சியாலும், சதியாலும் செய்யவே திட்டமிட்டு உள்ளுக்குள் இருந்தே நடத்தப்போகிறார்கள். இதற்கு சென்னை பிறப் பிடமாக இருந்தாலும் தஞ்சை, திருச்சி, வடஆர்க் காடு இந்த மாவட்டங்கள் முக்கிய தளமாக ஆக் கப்பட்டிருக்கின்றது. நடக்கட்டும். என் வாழ் நாளில் பல எதிர்ப்புகளுக்கு முகங் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு இருந்தது. அது போலவே இதுவும் என்று கருதியே காத்திருக் கின்றேன்.

❋

கள்,
மைக்
ப்பட
ங்கு,
ரங்
க

விலை — 20 காசுகள்